<u>சுருக்கம்</u>

வேளாண்மைப் பொறியியல் துறை – மழைநீர் அறுவடைத் திட்டம் மற்றும் ஓடுநீர் நிர்வாகத் திட்டம் 2008–2009 ஆம் ஆண்டில் கட்டுமானப் பணிகள் மேற்கொண்டது – விவசாய சங்கங்களுக்கு வழங்க வேண்டிய 10% பங்களிப்புத் தொகை தவறுதலாக அரசு கணக்கில் செலுத்தப்பட்டது – உரிய கணக்கு தலைப்பில் மாற்றம் செய்ய ஏதுவாக பிழை திருத்தம் (Note of Error) – வெளியிடப்படுகிறது.

---

<u>வேளாண்மைத் (வேபொ 2) துறை</u>

அரசு ஆணை (டி) எண் , 10

நாள் 20.01.2016
திருவள்ளுவராண்டு 2047
தை திங்கள் 6–ம் நாள்

படிக்க:

1. மாநில தலைமைக் கணக்காளர் (A&E), சென்னை–18, கடித எண் DC8/VI/PPT-55-56/2010-11/23, நாள் 06.01.2011.
2. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களின் கடித எண் SC2/ 64668/2011, நாள் 18.06.2015, 24.07.2015 மற்றும் 06.11.2015.

------

<u>ஆணை:</u>

மேலே படிக்கப்பட்ட தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களின் கடிதத்தில் 2008–2009 ஆம் ஆண்டு அரியலூர் ஒருங்கிணைந்த மாவட்டமாக இருந்தபோது (அரியலூர், பெரம்பலூர்) மழைநீர் அறுவடை மற்றும் ஓடுநீர் நிர்வாகத் திட்டத்தின்கீழ் விவசாயிகளிடமிருந்து பெற்ற 10% பங்களிப்புத் தொகையான ரூ.59,583/–உடன் சமுதாயப் பணிகள் செயல்படுத்தியமைக்கு, சங்கங்களுக்கு சேரவேண்டிய 10% பங்களிப்புத் தொகையான ரூ.79,260/–யையும் சேர்த்து ரூ.1,38,843/– உதவி செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) ஜெயங்கொண்டம் அவர்களால் 31.03.2009 அன்று “0435–00–104–AD-0009” என்ற வேளாண்மைப் பொறியியல் துறையைச் சார்ந்த வரவின கணக்குத் தலைப்பில் ஒட்டுமொத்த தொகையாக ரூ.1,38,843/– அரசு கணக்கில் செலுத்தப்பட்டது என்றும், மேற்காண் தொகை (ரூ.1,38,843/–) “0435–00–104–AD-0009” என்ற வேளாண்மைப் பொறியியல் துறையைச் சார்ந்த வரவின கணக்கிற்கு பதிலாக, வேளாண்மை இயக்குநர், சென்னை – 5 அவர்களின் வரவின கணக்கு தலைப்பான “0435–00–102–AE-0009” என்ற தலைப்பில் தவறுதலாக சார்நிலை கருவூலம், ஜெயங்கொண்டம் INPUT-II-ல் சேர்க்கப்பட்டுள்ளது என்றும், இது குறித்து பிழை திருத்தம் செய்ய மாநில கணக்காயர், சென்னை அவர்களிடம் கோரப்பட்டது என்றும், ஆனால், 2009–10 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் முடிக்கப்பட்ட நிலையில், இப்பொருள் தொடர்பாக

“Note of Error” கருத்துரு அரசளவில் அளித்திட மாநிலக் கணக்காயர் அவர்கள் கோரியுள்ளதாகவும் மேற்படி தொகையான ரூ.1,38,843/—யில், ரூ.79,260/—ஐ விவசாய சங்கங்களுக்கு திரும்ப அளிக்கவேண்டியுள்ளதாலும், இப்பொருள் தொடர்பாக மாநில கணக்காயரின் தணிக்கை பத்தி நிலுவையில் உள்ளதாலும், பத்தி தடை நீக்கம் செய்யவும், உரிய பிழை திருத்தம் (Note of Error) வழங்க தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்கள் அரசைக் கோரியுள்ளார்.

2. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, ஜெயங்கொண்டம் சார்நிலை கருவூலத்தில் தவறுதலாக “0435—00—102—AE-0009” என்ற வேளாண்மைத் துறையின், வரவின கணக்கு தலைப்பில் 31.03.2009 அன்று செலுத்தப்பட்ட தொகையான ரூ.1,38,843/—ஐ, வேளாண்மைப் பொறியியல் துறையை சார்ந்த வரவின கணக்கு தலைப்பான “0435—00—104—AD-0009”—க்கு மாற்றம் செய்யும்பொருட்டு “Note of Error” பிழைத் திருத்தம் செய்ய தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), சென்னை, அவர்களுக்கு அனுமதி வழங்கி அரசு ஆணை வெளியிடுகிறது.

3. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.கு. எண் 1109/வேளாண்மை/2016, நாள் 13.01.2016 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச. விஜயகுமார்,
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசுச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), சென்னை—35.
வேளாண்மை இயக்குநர், சென்னை—5.
மாநிலக் கணக்காயர், சென்னை — 18 / (பெயரில்)
சார்நிலை கருவூல அலுவலர், ஜெயங்கொண்டம், பெரம்பலூர் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர் (G&SSA), சென்னை — 18.
மாநிலக் கணக்காயர் (E&RSA), சென்னை — 18.
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை—8.
இருப்பிடத் தணிக்கை அலுவலர், முதன்மை மாநிலக் கணக்காயர் அலுவலகம்,
(சமூகத் தணிக்கைப்பிரிவு) சென்னை — 9.
கருவூல அலுவலர், அரியலூர் / கருவூலக் கணக்குத் துறை ஆணையர், சென்னை — 15.

நகல்
நிதித் (வேளாண்மை) துறை, சென்னை—9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலாளரின் தனிச் செயலர், சென்னை—9.
வேளாண்மைத் (அநுமு3) துறை, சென்னை—9.
இ.கோ/உதிரிகள்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்
22/01/16